# செவ்வானம்

மார்கழி 2012 | ஆரம்பம் : புரட்டாதி 2002 | இதழ் : 28 | இலவசம்


### சிறுத்தீவு பிரவேசம்...

ஏறக்குறைய நான்கு சகாப்தங்களுக்கு முன்னர் குருநகர் கலைக்கழகத்தினால் சமூக மேம்பாட்டுக்காக பல அபிவிருத்தி திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. இத்திட்டங்களில் மீன்பிடி பயிற்சி நிலையம், பாடசாலைக்கான விளையாட்டு மைதானம், கல்விசார் நடவடிக்கைகள், சிறுத்தீவில் குடியேற்றம் போன்றவைகள் அடங்கியிருந்தன.

காலப்போக்கில் இத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு இளைஞர் கலைக்கழகம் பக்கபலமாக இயங்கி வந்தது. 1969 இல் சிறுத்தீவுக் குடியமர்வுக்கு சாதகமான தரவுகள் சேர்க்கப்பட்ட போது இத்தீவில் அமைந்துள்ள லூர்து மாதா சிற்றாலயத்திலிருந்து வடக்கு நோக்கி 30 யார் தூரத்தில் நன்நீர் இருப்பதாக தோலகட்டி அருட் சகோதரர்களால் அடையாளப்படுத்தப்பட்டது.

மேலும் தும்புக் கைத்தொழில், சிப்பி சூளை வைத்தல், ஆடு - மாடு - கோழி வளர்த்தல், கருவாடு பதனிடல், தென்னை மரம் நாட்டுதல் போன்றவற்றை மக்கள் வாழ்வாதாரமாகக் கொள்வதற்கு சாதகமான சூழ்நிலை உண்டென்று ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் மழை காலங்களில் வெள்ளம் நிற்கும் பகுதிகளுக்கு கரையை அண்டிய பகுதிகளில் மண் அகழ்ந்தெடுத்து மேவி அந்நிலங்களில் குடியமர்த்தலாம் எனவும் பரிசீலனைக் குழுவினரால் சிபார்சு செய்யப்பட்டது.

இந்நிலையில் குருநகரில் ஏற்பட்டுள்ள சுகாதார மற்றும் சன நெருக்கடி, சுற்றம் சூழல் தீர்வாக அரசாங்கத்தினால் முன்வைக்கப்படுகின்ற அபிவிருத்தி திட்டங்களில் அவசியமாக சிறுத்தீவு குடியேற்றம்பற்றி ஆலோசிக்கப்படுவது நல்லது.



*சேதமுற்றிருந்த குருநகர் தூய வேளாங்கண்ணி மாதா சிற்றாலயம் தற்போது அழகுற திருத்தி அமைக்கப்பட்டு 22.12.2012 சனிக்கிழமை காலை யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருள்பணி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளாரால் ஆலய மந்திரிப்புத் திருச்சடங்கும், திருப்பலியும் நிறைவேற்றப்பட்டது.*

கற்றவருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்ற வாக்கிற்கிணங்க எம்முடைய சமூகம் எங்கே நிற்கின்றது? கல்வி கற்பதிலா வளர்ச்சி கண்டு நிற்கின்றது? இல்லையே. இந் நவீன காலத்திலே பொருளாதார விருத்தி, நவீன பொருட்கள் பயன்பாட்டு விருத்தியென நம்முடைய வாழ்க்கை வேட்டையாடும் சிங்கத்தைப் போல மிகவும் வேகமாக ஓடுகிறது. யார் கீழே விழுவார்கள் நான் அந்த இடத்திலே எழுந்து நிற்க வேண்டும் என்று முந்தியடித்துக் கொண்டிருக்கும் மனித வாழ்வில் நாம் எப்படியானதொரு நிலையில் நிற்கின்றோம். நம்முடைய சமூகம் எப்படியானதொரு நிலையில் நிற்கின்றது என சிறிது சிந்தித்துப் பார்ப்போம்.

முன்னர் நமது சமூகத்திலே அடக்குமுறைகள் காணப்பட்டது. பெண்கள் படிக்கக்கூடாது, வெளியே செல்லக்கூடாது என்று பலதரப்பட்ட வன்மையான முறைகள் காணப்பட்டன. எனினும் இன்று அப்படியில்லை. ஆனாலும் இன்றைய சமூகம் கல்வியில் நாட்டம் கொள்கிறதா? நாட்டம் கொள்ள எம்முடைய சமூகம் அதற்கு இடம் அளிக்கின்றதா இல்லையே. ஒரு பிள்ளை கற்பதற்கு வீட்டு அங்கத்தவர்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். மற்றும் சமூகம் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். எங்களுடைய வீட்டுச் சூழல், தாயும் தந்தையும் இரகசியமாக கதைக்கும் கதை அந்த நாளன்றே வீட்டிற்கு அருகேயுள்ள சந்தியிலோ அல்லது நீர் பிடிக்கும் இடத்திலோ அம்பலமாகிவிடும். தாயும் தந்தையும் நிற்கும் போதே அவர்கள் கதைத்த இரகசியக் கதையை அவர்களுக்கே திரும்பிக் கூறுவார்கள். இந் நிலைக்கு காரணம் எது தெரியுமா? எமது வீட்டின் நெருக்கடியான சூழல். அப்படியான ஒரு சூழலில் ஒரே பாட்டும் கும்மாளமும் என்றால் எப்படி பிள்ளைகள் படிப்பது? யாராவது இதனை தட்டிக்கேட்பார்களேயானால், அவர்களுடன் சண்டை பிடித்து ஒலி நாடாக்களை உரத்த சத்தமாக வேணும் என்று போடுவார்கள்.

# கல்விக்குத் தடைக்கல் சமூகமா!

இந்நிலையில் பிள்ளைகள் எப்படி தங்களுடைய கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்? எப்பொழுது எம்முடைய சமூகம் கல்வியில் எழுச்சி அடைவது? எத்தனை தந்தைமார் எம்முடைய சமூகத்திலே ஒவ்வொரு நாளும் குடித்துவிட்டு வந்து சண்டை போடுகிறார்கள். இதனால் படிக்கும் எத்தனை குழந்தைகள் பாதிக்கப்படுகிறார்கள்? புத்திமதிகள் சொல்லிக் கொடுக்க வேண்டிய தாய்மார் பிள்ளைகளோடு இருந்து தொலைக்காட்சி நாடகங்களை பார்க்கிறார்கள். இப்படியிருந்தால் எப்போது எம்முடைய சமூகம் முன்னேறும். இவற்றைவிட பிள்ளைகளே! எப்போது நீங்கள் உங்களுடைய சமூகத்தை உயர்த்தப்போகிறீர்கள்? உங்களுடைய எண்ணங்கள் எப்படி இருக்கிறது தெரியுமா, அடடா அந்தப் பெண் திருமணம் செய்துவிட்டாவே. நானும் எப்போது திருமணம் செய்வது என்று மனதிற்குள் எண்ணி சிறிய வயதிலேயே திருமணங்களை முடித்தால் இதன் விளைவு என்ன தெரியுமா? குடும்பங்கள் எப்படி நடத்துவது என்று தெரியாத நிலை, இளவயதில் கர்ப்பங்கள் தரிப்பதால் பிள்ளைகள் ஊனமாக பிறத்தல், பிள்ளைகளுக்கு வேண்டிய புத்திமதிகளைக் கூறமுடியாமை என பல்வேறுபட்ட பிரச்சனைகள் காணப்படுகின்றன. இப்படி இருக்கும் போது பிள்ளைகளுடைய கல்வி நிலை அந்தோ! பரிதாபம்.

பிள்ளைகளே துணிவுடன் எழுங்கள்!, உங்களுடைய வாழ்க்கையில் உங்களுடைய இலட்சியக் கனவை அடைய தடைக்கல்லாக இருக்கும் சமூகத் தடைகளை உடைத்து எறியுங்கள். உலகில் உயிரோடு வாழ்வது மட்டும் வாழ்க்கையல்ல; உயரிய கொள்கைகளுக்காக மடிவதிலும் உள்ளது. எனவே கல்விக்காக சமூகத்திடம் இருந்து போராடுங்கள். சமூகத் தடைக்கல்லை உடைத்து பாதாளக் கிணற்றுக்குள் போடுங்கள்.

"கல்வி என்பது ஒவ்வொரு மனிதனுடைய உயிர் மூச்சு"

**- உதயா ஜெனீவா**

# சீர்பெற்று துலங்கும் வித்தியாலயம்

ரி.ஞானப்பிரகாசம்
(அதிபர்)

கடல் அலைகள் கரைமோதும் அழகிய எம் குருநகராம், திருநகரில் புனித யாகப்பரின் துணைகொண்டு அவருடைய பெயராலே 'வருங்காலத்திற்கு வழிவகு' என்ற மகுட வாசகத்தோடு இயங்கிவரும் யா/சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயமானது தனது தூர நோக்காக உலகின் சிறப்பான மாற்றங்களுடன் இணைந்து செல்லும் வகையில் தேசிய கொள்கைகளை நிறைவு செய்யும் பொருட்டு எமது கலாசார விழுமியங்களுடன் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

எமது மாணவர்களின் அறிவுத்திறன், மனப்பாங்கு, விழுமியங்களை விருத்தி செய்து சமூகத்தோடு இணைந்து வாழக்கூடிய மாணவ சமூகத்தை உருவாக்குவதை இலக்காக கொண்டு செயற்படுகிறது.

மேலும் எமது வித்தியாலயத்தில் தற்போது 22 ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கின்றனர். 350 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். மற்றும் பிரான்ஸ் அமைப்பின் நிதி உதவியுடன் நூலக உதவியாளராக ஒருவரும் கடமையாற்றுகின்றார். எமது பாடசாலையில் மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு குருநகர் கல்வி முன்னேற்றக் கழகத்தினரால் ஒரு ஆசிரியரும், வலயக் கல்வி முறைசாராக் கல்விப் பிரிவினரால் ஒரு ஆசிரியரும், கல்வி கற்பித்துக் கொண்டு வருகின்றார்கள்.

விசேட தேவையுள்ள 10 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றார்கள். இவர்களுக்கென ஒரு அலகு தனியாக இயங்கி வருகின்றது. இவ் வருடம் மாகாண மட்டம் வரை விளையாட்டு நிகழ்வுகளில் கலந்து கொண்டு பரிசில்கள் பெற்றுள்ளனர்.

2011ம் வருடம் உதைப்பந்தாட்டத்தில் 14 வயதுப் பிரிவினர் கோட்ட மட்டத்தில் 1ம் இடம் பெற்று வலய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளனர். 2012ம் வருடம் 16 வயதுப் பிரிவினர் கோட்ட மட்டத்தில் 2ம் இடத்தினை பெற்று வலய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளனர். பி.சதீஸ் நீளம் பாய்தலில் 2ம் இடமும், மரதன் ஓட்டத்தில் 2ம் இடமும் பெற்றுள்ளனர்.

2011ம் வருடம் புலமைப் பரிசில் பரீட்சையில் செல்வன் லக்ஸ்மன் யோசுவா (156) புள்ளிகளைப் பெற்றுள்ளார். 2012ம் வருடம் செல்வன் பொபிசன் சந்தோஸ் (154) புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவருக்கு ஆளுநரால் 5000 ரூபாய் பரிசாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பின்வரும் மாணவர்கள் 2010ம் 2011ம் வருடங்களில் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் சித்தி பெற்று வேறு பாடசாலைகளில் உயர்தரக் கல்வி பயில்கின்றார்கள்.

2010

1. கிறிஸ்துராசா அருள் 2B, 4C, 2S
2. தேவராஜ் ஆனந்தராஜ் 2B, C, 5S
3. அனஸ்ரீன் ஜஸ்ரீன் டலிஸ்குமார் 2B, C, 3S
4. மரியதாஸ் கனிஸ்ரன் 3A, B, 3C, S
5. அன்ரனி அருள்ராஜ் A,3C, 4S
6. ஸ்ரனிஸ்லோஸ் கெர்சோன் A, 3C, 5S
7. குயின் யோண் ஒவ்ஆர்க் வோக்ஸ்மன்கிறீக் A, 5C, 2S

2011

1. அன்ரனிப்பிள்ளை டார்வின் A, 3B, 3C, S
2. பிரான்சிஸ் ரவிந்திரன் அன்ரனிசாள்ஸ் A, 3B, 2C, 2S
3. டிலிப் றஞ்சன் அருந்தவராஜ் A, 2B, 3C, 2S
4. பிரான்சிஸ் ரவிந்திரன் அன்ரனி குயின் A, B, 4C, 2S
5. தேவராசா துஸ்யந்தன் 3B, C, 5S
6. மவுண்பெற்றன் யூலியன் 2B, 4C, 3S
7. மரியநாயகம் மரியதனுஜன் B, 3C, 2S

பல்வேறு கலைத்துறைகளிலும் பங்குகொண்டும் வெற்றி பெற்றுள்ளனர். சித்திரப் போட்டியில் லி.அன்ரனி 2ம் இடம், ஜெ.எபிநேசன் 3ம் இடங்களைப் பெற்றுள்ளனர். யா/மாநகரசபையால் நடத்தப்பட்ட பாட்டுப் போட்டியில் ஆ.டாரஸ் 1ம் இடம் பெற்று 10,000.00 ரூபாவினை பரிசாகவும், எழுத்தறிவுப் போட்டியில் ப.தினேஸ் 1ம் இடம், அ.கோல்வின் 3ம் இடங்களைப் பெற்றுள்ளனர்.

எமது பாடசாலையின் விருத்திக்கு பலரும் உதவியுள்ளனர். பிரான்ஸ் அமைப்பினரால் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி, முத்தமிழ் விழா, ஒளிவிழா என்பவற்றுக்கு நிதியாக 20,000.00 ரூபா எமக்கு அன்பளிப்பு செய்யப்படுகிறது. மற்றும் 90 X 26 மாடிக் கட்டடமும் கணனி அறையும் திருத்தம் செய்யப்பட்டு அழகாக காட்சியளிக்கிறது. கியூடெக் நிறுவனத்தின் உதவியுடன் வறிய மாணவர்களுக்கு சப்பாத்தும், பாடசாலை உபகரணமும் வழங்கப்பட்டு மாணவர்களுக்கு உதவி செய்து அவர்களது கல்வி வளர்ச்சியில் அக்கறை செலுத்துவது பெருமைக்குரிய விடயமும் பாராட்டக் கூடியதும் ஆகும்.

பாடசாலை மாணவர்களுக்கு கல்வியை மட்டும் வழங்காது அவர்களது உளச் செயற்பாடுகளிலும் ஆன்மீகச் செயற்பாடுகளிலும் அக்கறை காட்டும் முகமாக வளர்பிறை நிறுவனத்தினரால் வாரத்தில் ஒவ்வொரு செவ்வாய் கிழமையும் பிற்பகல் 2 மணிக்கு தரம் 9 வகுப்பு மாணவர்களுக்கு உளவளம் பற்றி பயிற்சி அளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப் படுகின்றது. ஆன்மீகச் செயற்பாடாக மாதாத்தின் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் திருப்பலி நடைபெறுகிறது.

இவ்விதமாக வினைதிறனும் விளைதிறனும் உயரும் வண்ணம் பயனுறுதியுடைய கொள்கையும் பண்பாட்டுச்சீரும் கொண்டு வளர்ந்து வரும் எம் பாடசாலை பல்துறை வளர்ச்சியில் உயர்ந்து செல்வது பார்போற்றும் செயற்பாடாகவே திகழ்கின்றது என்பதோடு குருநகர் நடுவே குலவிளக்காய் இருந்து பல்வேறு சுடர்களை பிரகாசிக்கும் எம் பள்ளி என்றும் சீர்பெற்று துலங்கி சிறப்போடும் மிளிருகிறது எனலாம். ■



குருநகர் குடியேற்றம் புனரமைப்புக்கான இணையத்தினால் மேற்கொள்ளப்படும் அல்லைப்பிட்டி வெண்புரவி நகர், குருநகர் மக்களின் குடியேற்றத்திட்டத்தில் அமைந்துள்ள 'பேளி டேவிற் முன்பள்ளி' மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக சென் ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகத்தினால் மாதந்தோறும் உதவி செய்யப்படுகின்றது. மேலும் கலை, கலாசார நிகழ்வுகளுக்கான உதவி வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

"பீச் றோட்டில அக்சிடென்ற். ஆட்டோவும் பல்சரும் மோதி பல்சர் காரனுக்கு பெரிய காயமாம்."

"றோட்டில ஏதாவது பந்தல் போடப்பட்டி ருந்ததா?" அவன் அசுவாரசியமாக கேட்கிறான்.

"நான் சீரியசாக சொல்லுறன், நீ என்னடாவென்றால் ரொம்ப அலட்சியமாக..." கோபத்துடன் அவன் பெரிதாக கத்துகிறான். அவனது உடல் நடுங்குகிறது.

"ஏன் ரென்சனடைகிறாய்? பிரசர்காரனாகிய உனக்கு பிரசர் கூடப்போகிறது. கூல்டவுண்... கூல்டவுண்" அவன் மீண்டும் நிதானமாகவே கூறிவிட்டு,

## இது கதையல்ல...

"இஞ்சபாரும், நம்மட ஊரில 365 நாட்களிலும் ஏதோ ஓரிரு வீதிகளில் பந்தல்களை காணுவது சகஜம்தானே? கலியாணம்; சாமத்தியம்; அற்றோம்; பிறந்தநாள்; செத்தவீடு இப்படி ஏதாவது ஒரு நிகழ்ச்சிகள் நடந்தபடிதானே இருக்கிறது."

"உம்மட கதையைப் பார்த்தால் இப்படியான நிகழ்ச்சிகள் நடத்துவது பிழையென்று சொல்கிறீரா? நம்மட ஊரில இட வசதியில்லையென்று இங்கு பிறந்த உமக்கும் தெரியும்தானே? ஏதோ வானத்தில் இருந்து வந்தமாதிரி வந்து நியாயம் படிப்பிக்கிறீரே?"

"அப்படி நான் சொல்லவில்லை. இஞ்சபார் மெயின் றோட்டிலயும் அரைவாசி மறைக்கப்படுகிறது. உள் வீதிகள் அநேகமாக முற்று முழுதாக மறைக்கப்படுகிறது. இதன் மூலமாக பாதசாரிகளுக்கும் போக்குவரத்துக்கும் இடையூறு செய்யப்படுவது நியாயமா? போகட்டும் வீதிகளின் ஓரங்களில் கதிரைகளில் அமர்ந்து சாப்பிடுகிறார்களே இது சுகாதாரத் துக்கு பாதிப்பில்லையா?" அவன் அமைதியாக கேட்டு நிற்க,

"இவர் பெரிய சீர்திருத்தவாதி என்று நினைப்பு."

"கேள்விகள் கேட்பது பெரிதல்ல அதற்கான தீர்வையும் சொல்லத் தெரிந்திருக்க வேண்டும். இல்லாவிடில் முடிவு தெரிந்திருக்கும்" என கோபமாக சொல்லி முடிக்க, அவன் அமைதியாக சிரித்தபடி,

"இஞ்சபாரும், நம்மட எல்லைக்குள் எத்தனை பொது மண்டபங்கள் இருக்கின்றன? எதேச்சையாக வரும் செத்த வீட்டைத் தவிர ஏனைய நிகழ்ச்சிகள் யாவும் திட்டமிட்டுத் தானே நடைபெறுகின்றன. இவற்றை இந்த மண்டபங்களில் நடத்துவதால் ஏதாவது குறைந்துவிடப் போகிறதா? எல்லோரது பொது நன்மை கருதி சில வசதியீனங்களை, செலவுகளை ஜீரணித்துக் கொண்டால் என்ன?"

"நீர் சொல்வதும் சரி போலத்தான்படுகிறது."

இப்ப அவனின் ரென்சன் குறைந்து நோர்மலாகி விட்டது.

**- குருநகர் யோகி**

# நலந் தரும் நம்பிக்கை

**ஆர்.ஏ.நாயகி**

"யானையின் பலம் தும்பிக்கையில். மனிதனின் பலம் நம்பிக்கையில்." என்பது ஆன்றோர் வாக்கு. நம் வாழ்க்கைச் சக்கரம் உருள, நம்பிக்கையே அச்சாணியாகின்றது. என்னால் முடியும் என்ற தன்னம்பிக்கையும், விடா முயற்சியுடன் கூடிய உழைப்புமே வாழ்வை மேம்படுத்துகிறது. செருப்புத் தைக்கும் தொழிலாளியின் மகனாகிய, தோற்றப் பொலிவற்ற ஆபிர காம் லிங்கனே அமெரிக்க ஜனாதிபதியாகி, அரும் செயல்கள் பல புரிந்து, அடிமைத்தளை அறுத்த உயர்ந்த மனிதனாக இன்றும் உலக மக்கள் மனதில் பதிந்து நிற்கிறார். இதற்கு காரணம், அவர் கொண்டிருந்த தன்னம்பிக்கையும், விடா முயற்சியுமே. காந்தி முதலிய பெரியவர்களின் வாழ்க்கையும் இதையே எமக்கு அறிவுறுத்துகின்றன.

"நம்பநட, நம்பி நடவாதே." என்றும் சொல்வார்கள். இக் கூற்றில் உண்மை இருந்தாலும் நாம் ஒருவரையுமே நம்பாமல் வாழ்ந்துவிட முடியாது. சமூகப் பிராணியான மனிதன், குடும்பம், குழுமம் ஆகிய கட்டுக்கோப்புக்களில் வாழப்பிறந்தவன். கணவன், மனைவி, பிள்ளைகள், சகோத ரர்கள் என்ற உறவுகள் குடும்பத்திலும், உற்றார், உறவினர், சுற்றம் என்கின்ற சூழமைவுக்குள்ளும் வாழும் நாம் பிறரை யும் நம்பி வாழும் கட்டாயத்தில் உள்ளோம். குழந்தை பெற் றோரை நம்பி வாழ்வைத் தொடங்குகிறது. பள்ளிப் பருவத் தில் ஆசிரியர், பெரியோர், வழிகாட்டிகளை நம்பித் தன் எதிர்காலத்தை நிர்ணயிக்கிறது. மணவாழ்வில் கணவன் மனைவி ஒருவர் ஒருவரை நம்பி, இல் வாழ்வில் இணை கின்றனர். இந்த நம்பிக்கை வீண்போகாது காக்கப்பட வேண்டும். உறவினர், நண்பரோடு பழகும்போது, நம்பிக்கைக் குரியவர் யார்? என்பதை அறிந்தே நாம் பிறரை நம்ப முற்பட வேண்டும். கண்மூடித்தமான நம்பிக்கையும் ஆபத்தானதே.

தும்பிக்கையில் புகும் ஒரு சின்னஞ்சிறு எறும்பு யானையின் வாழ்வையே முடித்துவிடுவது போல், நம்பிக்கை யீனமாகிய சந்தேகம் குடும்பத்தில் புகுந்தால் நம் வாழ்வையே நாசமாக்கும். ஆகவே முதலில் பிறரின் நம்பிக்கைக்கு ரியவர்களாக நாம் வாழ்வோம். எவ்விதத்திலும் மற்றவருக்குத் தீங்கிளைக்காத வகையில், முடியுமானால் அவர்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் நம் வாழ்வின் முன்னேற்றத் திற்காகத் தன்னம்பிக்கையுடன், விடாமுயற்சியாக உழைப் போம். அதனால் நாமும் உயர்ந்து, பிறரையும் உயர்வடையச் செய்ய நம்மால் முடியும்!. ■



பிரான்ஸ் பழைய மாணவர் சங்கத்தின் ஆதரவில் இயங்கும் சென் ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகத்தின் 'கிறிஸ்மஸ் ஒன்று கூடலும் மாணவர் கௌரவிப்பு நிகழ்வும்' கடந்த 28.12.2012 மாலை 5.00 மணிக்கு, கலாசார மண்டபத்தில், திரு. அ. யேசுதாசன் தலைமை யில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை றோ. நேசராஜா அடிகளார் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்.

பாலன் குடிலுக்கு ஒளியேற்றும் நிகழ்வையும், சிறுவர் கழகத்தின் நடனத்தையும் தொடர்ந்து சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம் மற்றும் சென் ஜேமஸ் மகளிர் பாடசாலையைச் சேர்ந்த மாணவ மாணவிகளில் 2011 ஆம் ஆண்டு க.பொ.த.(சா) பரீட்சையில் சித்தியடைந்த 34 பேருக்கும், புலப்பரிசிலில் சித்தியடைந்த இருவருக்கும், பல்கலைக்கழக அனுமதி பெற்ற ஒருவருக்கும் கௌரவிப்புப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

# பாடசாலை அடைந்த முன்னேற்றம்

கடல் அலைகள் கொஞ்சி விளையாடும் எம் குருநகர் சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை

பிரதேசத்தின் மகுடமாய் விளங்கும் சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை கடந்த காலங்களில் படிப்படியான வளர்ச்சி கண்டு வருவதனை அனைவரும் கண்கூடாக அறிந்திருக்கின்றோம். கல்வியிலும் இணைபாடவிதான செயற்பாடுகளிலும் பெயர் குறிப்பிடக்கூடிய வகையில் எமது பாடசாலை முன்னேற்றம் அடைந்துள்ளது. கடந்த காலங்களில் எமது பாடசாலையை பார்வையிடுவதற்காக வருகை தந்த அயற்பாடசாலைகளும், வெளிமாவட்ட பாடசாலைகளும் இதற்கு சான்று பகிர்கின்றது.

மேலும், கடந்த காலங்களில் கிடைத்த க.பொ.த சாதாரண உயர்தர பெறுபேறுகள் பின்வருமாறு உள்ளன.

| ஆண்டு | பரீட்சை | தோற்றி | சித்தி | பல்கலை |
|---|---|---|---|---|
| 2009 | (சாதா) | 35 | 17 | |
| | (உயர்) | 16 | 14 | 3 |
| 2010 | (சாதா) | 43 | 19 | |
| | (உயர்) | 20 | 16 | 3 |
| 2011 | (சாதா) | 41 | 20 | |
| | (உயர்) | 19 | 16 | 3 |

மேலும் கடந்த வருடம் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியிலும் எமது மாணவர்கள் எல்லே விளையாட்டுப் போட்டியில் யாழ். வலயத்தில் 2ம் இடத்தைப் பெற்று மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகி பலரின் பாராட்டுகளைப் பெற்றுக் கொண்டனர்.

எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு புலம்பெயர் வாழ் குருநகர் மக்களிடமிருந்து பல்வேறு உதவிகள் கிடைக்கின்றன. குறிப்பாக, பிரான்ஸ் வாழ் பழைய மாணவர் குருநகர் சென்.ஜேம்ஸ் பழைய மாணவர் அமைப்பின் ஊடாக உதவிகளை வழங்கி வருகின்றனர். அவர்களுக்கும் ஒத்துழைப்பு வழங்கிவரும் நல் உள்ளங்கட்கும் சிறப்பாக எமது பங்குத் தந்தை றோ.நேசராஜா அடிகளார் அவர்களுக்கும் இந்நேரத்தில் எமது பாடசாலைச் சமூகம் சார்பில் நன்றியைக் கூறிக்கொள்கின்றேன்.

எமது பாடசாலை மென்மேலும் வளர கல்வியில் உயர உங்கள் அனைவரின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் எதிர்பார்த்து நிற்கின்றோம்.

**- யூயின் யூலியஸ்**
(உப அதிபர்)



**- ஜோ. சுஹேஷினி**

# இன்றைய அரும்புகள் நாளைய மலர்கள்

இன்று ஏடு தூக்கும் இளஞ் சிறார்கள்தான் நாளை நாடு காக்கும் தலைவர்கள். ஆனால், இக்காலத்தில் பல மாணவர்களிடையே கல்வியின் மேலிருக்கும் ஆர்வம் குறைந்து வருகின்றது. கல்வி ஒரு கட்டாய சுமையாகக் கருதப்படுகிறது.

வரலாற்றை ஏன் படிக்கவேண்டும்? பழமொழிகளை ஏன் மனப்பாடம் செய்யவேண்டும்? என்று சிறுவர்கள் கேள்விக் கணை தொடுக்க ஆசிரியர்களும் பெற்றோரும் படி, படி என்று நாள்தோறும் நச்சரிக்கின்றனர். கல்வியின் முக்கியத்துவத்தை மாணவர்களுக்கு யாரும் எடுத்துக் கூறுவதில்லை.

திருக்குறளை எடுத்துக்கொள்வோம். அது தமிழ் இலக்கியத்திலும், தமிழ் கலாசாரத்திலும் அங்கீகாரம் பெற்றுள்ளது. பாடசாலைகளில் திருக்குறள் கற்பிக்கப் படுகிறது. ‘கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக’ என்பது யாவரும் அறிந்ததே. ஆனால், அதன் அர்த்தத்தைத் தெளிவாகப் புரிந்தவர்கள் அரிது. திருக்குறளை பாடமாக்கு என்று மாணவர்களை நச்சரிக்காமல், குறளின் அர்த்தத்தை விளக்கி, வள்ளுவரின் வார்த்தைகளின்படி நம் வாழ்க்கையை எவ்வாறு வாழலாம், வாழவேண்டும் என்று கவர்ச்சியான முறையில் எடுத்துக்கூறவேண்டும்.

ஏழ்மை இன்று நம் நாட்டில் கல்விக்கு ஒது தடைக் கல்லாக இருக்கிறது. படிக்காமல் வேலைக்குச் சேர்ந்தால் பணம் ஈட்டலாம் என்ற நினைப்பில் பல சிறார்கள் பள்ளிக்குச் செல்வதில்லை. படித்தால் இன்னும் நல்ல வேலை கிடைக்கும் என்று தெரிந்தாலும் அத்தருணத்தில் குடும்பத்தில் அவதி என்று தங்கள் படிப்பை கைவிடுகிறார்கள். இச்சிறார்களுக்கு சமுதாயம் உதவிக்கரம் நீட்டவேண்டும். தடைக்கற்களைப் படிக்கற்களாக மாற்ற முடியும் என்று ஊக்கம் கொடுக்க வேண்டும். நம் நாட்டின் எதிர்காலம் நம் கைகளிலே. இளைய தலைமுறையிடையே கல்வியின் முக்கியத்துவத்தை மனதில் ஆழமாகப் பதியவைக்கவேண்டும். நம்நாடு செழித்து வளர்ந்து, உலக ரீதியில் வீறுநடை போட, சிறுவர்களிடையே கல்வியின்மேல் ஆர்வம் ஊட்டுவது இன்றியமையாதது. ■

## நூல் இரவல் கொடுக்கும் பகுதி ஆரம்பம்



ஏற்கெனவே இயங்கி வந்த குருநகர் பரி. கார்மேல் மாதா சனசமூக நிலையத்தில், ‘நூல் இரவல் கொடுக்கும் பகுதி’ 29.12.2012 பி.ப. 5.00 மணிக்கு சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து பலரும் அங்கத்தவராக இணைந்து கொள்ள ஆர்வம் காட்டினர்.

**மாணவர்களின் கற்றலை ஊக்குவிக்கும் முகமாக பொது அறிவுப்போட்டி**

காலஞ்சென்ற இராயப்பு லூர்துநாயகி ஞாபகார்த்தமாக ‘நியூ பிறைற்’ கல்வி நிலையத்தால் நடத்தப்படும் தரம் 3 முதல் 11 வரை கற்போருக்கான **பொது அறிவுப்போட்டி** 20.01.2013 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்கு நியூ பிறைற் கல்வி நிலையத்தில் கட்டணமின்றி கல்வி பயிலும் வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

குருநகர் சென் ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகத்தினால் (ஆதரவு: சென் ஜேம்ஸ் பழைய மாணவர் சங்கம் - பிரான்ஸ்), இல. 28 மாட்டின் வீதியிலுள்ள ‘ஜெயந்த் சென்றர்’ இல் வடிவமைக்கப்பட்டு அச்சிடப்பட்டது.